**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. P. பாலமுருகன், B.Com., B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2023 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 08 ஆம் நாள் வியாழக்கிழமை**

**<u>I.A.No.06/2023 In O.S.No.131/2018</u>**

1) பெருமாள் (இறப்பு)

2) தங்கவேல்

3) சின்னதுரை

4) இளஞ்சியம்

5) மாரியாயி

6) பானுமதி

7) சுமதி ..... மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1) தான்தோன்றி பெருமாள்

2) வீரம்மாள்

3) முத்துசாமி

4) முத்துசாமி

5) அய்யப்பன் (இறப்பு)

6) சுப்பிரமணி

7) வட்டாட்சியர், குளித்தலை

8) வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை

9) மாவட்ட வருவாய் அலுவலர், கரூர்

10) மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்

11) தமிழ்செல்வன்

12) கிருத்திகா .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 05.06.2023 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், 4, 5, 11 மற்றும் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்

திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 10 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.K.S.M. சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகக் கொண்டும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

அசல் வழக்கின் வாதிகள் தரப்பில் உரிய காலத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்யக்கோரும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

## மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்

1. மனுதாரர் அசல் வழக்கின் 2ம் வாதி. வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும் ஆதரவுகள் தற்சமயம் தான் கிடைக்கப்பெற்றதால் மேற்படி ஆதரவுகளை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே, உரிய காலத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்யக்கோரும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை ஆட்சேபணையின் சுருக்கும்

2. மனுதாரரின் மனு சரியல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை பொருத்து யாதொரு வழக்குரையும் இல்லை. மனுவில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களுக்கும் தாவா வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. எனவே மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு

அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா அசல் வழக்கானது வா.சா.1 சாட்சியத்தின் தொடர்ச்சிக்காக உள்ள நிலையில், கூடுதல் ஆவணம் தாக்கல் செய்ய அனுமதிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. மனுதாரர்கள் தாக்கல் செய்யக்கோரும் ஆவணம் வழக்கிற்கு தேவையற்றது என்றும், தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அல்ல என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டது.

6. ஒரு வழக்கில் வழக்குரை தாக்கல் செய்யும் போதே வாதிகள் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் தாக்கல் செய்யப்படவேண்டுமென்றும், அவ்வாறு தாக்கல் செய்யாத சமயத்தில் உரிய காரணம் தெரிவித்தால் அந்த ஆவணங்களை ஏற்றுக்கொள்ளலாம் என உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மனுதாரர்கள் தாக்கல் செய்யக்கோரும் ஆவணம் வழக்கிற்கு தேவையா இல்லையா என்பதை பொறுத்து வழக்கு விசாரணை முடிவில் தான் தீர்மாணம் செய்ய இயலும். எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

<u>முடிவாக,</u>

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2023 ம் ஆண்டு ஜுன் திங்கள் 08 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**Sd/- P. பாலமுருகன்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர்கள் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

**Sd/- P. பாலமுருகன்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**